


தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிறு, அக்டோபர் 25, 2026 | இதழ் 195

# சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களின் தியாகத்துக்கு வீரவணக்கம்: முதல்வர் விஜய்

சென்னை, 25 அக்டோபர் 2026: தாய்நாட்டின் விடுதலைக்காக தம் இன்னுயிரைத் தியாகம் செய்த, சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களின் நினைவு நாளில், அவர் தம் ஒப்பற்ற வீரத்தையும், அளப் பரிய தியாகத்தையும் போற்றி எனது வீர வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

இந்தியாவின் முதல் சுதந்திரப் போருக்கு முன்னதாகவே, ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து, அனைவரையும் விடுதலைப் பாதையில் ஒன்றிணைக்கும் வகையில், 'ஜம்புத் தீவு பிரகடனத்தை' முழங்கிப் போராடிய மருது சகோதரர்களின் அர்ப்பணிப்பு போற்றுதலுக்குரியது.




விடுதலை உணர்வைத் தமிழ் மண்ணில் விதைத்த மருது சகோதரர்களின் மிர வரலாறு தலைமுறைகளைக் கடந்தும் நிலைத்திருக்கட்டும் என்று அவர் கூறியுள்ளார்.

# எரிபொருள் மீது மதிப்புக் கூட்டுவரி குறைப்பு: முதல்வர் விஜய்க்கு விமான நிறுவனங்கள் நன்றி

சென்னை 25, அக்டோபர் 2026: விமான எரிபொருள் மீதான மதிப்புக் கூட்டு வரியை குறைத்ததற்காக முதலமைச்சர் விஜய்க்கு இண்டிகோ மற்றும் ஏர் இந்தியா நிறுவனம் நன்றி தெரிவித்துள்ளது.

விமான எரிபொருள் மீதான மதிப்புக் கூட்டு வரியை குறைக்கப் போவதாக தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதில் வணிகப் பயணிகளுக்கான விமானப் பயணச் செலவுகளைக் குறைக்கவும், மாநிலத்திற்குள் விமான நிறுவனங்கள் தங்கள் சேவைகளை விரிவுபடுத்த ஊக்குவிக்கவும், தமிழக அரசு மாநிலத்திற்குள் விமானச் சேவைகளுக்காக திட்டமிடப்பட்ட விமான நிறுவனங்களுக்கு வழங்கப்படும் விமான டர்பைன் எரிபொருள் மீதான மதிப்புக்கூட்டு வரியைக் குறைத்துள்ளது. இந்த வரிக் குறைப்பு வரும் நவம்பர் 1-ம் தேதி முதல் 2027 அக்டோபர் 31-ம் தேதி வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சென்னை விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்கான மதிப்புக்கூட்டு வரி 29%-லிருந்து 16%-ஆகவும், மற்ற விமான நிலையங்களில் 29%-லிருந்து 1%-ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. விமான எரிபொருள் மீதான மதிப்புக்கூட்டு வரியைக் குறைத்ததற்காக, தமிழ்நாடு முதலமைச்சருக்கும், தமிழ்நாடு அரசுக்கும் விமான நிறுவனங்கள் தங்களது நன்றியைத் தெரிவித்துள்ளது. இது குறித்து ஏர் இந்தியா தனது சமூகவலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:




சென்னை விமான நிலையத்தில் வரியை 29 சதவீதத்திலிருந்து 16 சதவீதமாகவும், மாநிலத்தின் பிற விமான நிலையங்களில் 1 சதவீதமாகவும் குறைத்திருப்பது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். இது செயல்பாட்டுச் செலவுகளைக் குறைக்கவும், விமான இணைப்புகளை மேம்படுத்தவும் உதவும். நாங்கள் எங்களின் சேவையை மேலும் வலுப்படுத்தவும், தமிழ்நாட்டு மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கவும் இது உதவும் என்று தெரிவித்துள்ளது.

இண்டிகோ விமான நிறுவனம், தனது எக்ஸ் தளப் பதிவில் பதிவிட்டிருப்பதாவது: விமான எரிபொருள் மீதான மதிப்புக் கூட்டு வரியைக் குறைக்கும் தமிழக அரசின் இந்த முடிவை வரவேற்கிறோம். இந்த முற்போக்கான முன்னெடுப்புக்கு முதல்வர் விஜய்க்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இத்தகைய நடவடிக்கைகள் விமானப் போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்துவதோடு, மாநிலத்தின் சுற்றுலா மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும்.

இதுபோன்ற முற்போக்கான முன்னெடுப்புகள் விமானப் பயணத்தை மேலும் எளிதில் அணுகக்கூடியதாக மாற்றும் என நம்புகிறோம் என்று குறிப்பிட்டுள்ளது.




# வங்கக் கடலில் புயல்: 5 நாட்கள் மீனவர்கள் கடலுக்கு செல்லத் தட

சென்னை 25, அக்டோபர் 2026: வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது 26ந்தேதி புயலாக (அர்னாப்) வலுவடைந்து, ஆந்திரா-ஒடிசா கடற்கரைப் பகுதிகளை நோக்கி நகரும் என்றும், தமிழகத்தில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக்கடலில் புயல் உருவாக உள்ளதால் நாளை முதல் 5 நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்கு செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளது. குமரிக்கடல் பகுதிகள் மற்றும் அதனையொட்டிய தென் தமிழக பகுதிகள் மற்றும் கேரள பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி தற்போது தென் கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனையொட்டிய லட்சத்தீவு பகுதிகளில் நிலவி வருகிறது. இதன் காரணமாக கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து காணப்படுகிறது. இந்த நிகழ்வின் தொடர்ச்சியாக தென் கிழக்கு மற்றும் அதனையொட்டிய மத்திய கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவி வந்த வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நேற்று காலை மத்திய கிழக்கு மற்றும் அதனையொட்டிய தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக உருவாகியது. இது இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. இது தொடர்பாக, இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென் கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலை கொண்டு உள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி; அதே பகுதியில் நீடித்து, இன்று காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது என்றும், மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் நிலையில் நாளை (26ந்தேதி) அர்னாப் சூறாவளி புயலாக மாறும் என்று தெரிவித்துள்ளது.

அதாவது தென் கிழக்கு வங்கக்கடலில் அடுத்த 48 மணி நேரத்தில் அர்னாப் புயல் உருவாக வாய்ப்பு உள்ளது. ஆந்திரா - ஒடிசா கடற்கரைப் பகுதிகளை நோக்கி நகரும் என்றும், யூமிழகத்தில் கனமழைபெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இவற்றின் தாக்கத்தால் திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அதிமிக கனமழை பெய்யும் என்பதால் ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. மேலும் கோவை, நீலகிரி, தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்யக் கூடும்.

ஈரோடு, சேலம், நாமக் கல், கரூர், திருச்சிராப்பள்ளி, தென்காசி, மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருப்பூர், பெரம்பலூர், அரியலூர், திருவண்ணாமலை, வேலூர், ராணிப்பேட்டை, புதுக்கோட்டை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, சிவகங்கை, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், தர்மபுரி, ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் சென்னை வானிலை மையம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

மீனவர்களுக்கு தடை இந்நிலையில் வங்கக் கடலில் புயல் உருவாக உள்ளதால் இன்று (25ந்தேதி) முதல் 5 நாட்களுக்கு (29ந்தேதி) மீனவர்கள் கடலுக்கு செல்லத் தடை வியீக்கப்பட்டுள்ளது. இதன்படி மீன் பிடிக்க கடலுக்கு சென்ற அனைத்து வகை படகுகளும் இன்று இரவுக்குள் கரைக்கு திரும்ப மீன்வளத்துறை உத்தரவிட்டுள்ளது.

# இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து அஜர்பைஜான் அதிபருடன் அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை



சென்னை 25, அக்டோபர் 2026: அஜர்பைஜான் சென்றுள்ள ஒன்றிய அமைச்சர் ஜெய்சங்கர், நேற்று அந்நாட்டு அதிபரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தியா, அஜர்பைஜான் இடையேயான உறவுகளில் வர்த்தகம், சுற்றுலா, கலாச்சாரம் உள்ளிட்டவை முக்கியத்துவம் பெற்றுள்ளன. இந்தியாவில் இருந்து அஜர்பைஜானுக்கு அரிசி, மருந்துகள், மின்னணு பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதேபோல் அஜர்பைஜானில் இருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களில் கச்சா எண்ணெய் முக்கியமானது. இந்நிலையில் ஒன்றிய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று அஜர்பைஜான் நாட்டுக்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொண்டுள்ளார். கடந்த 8 ஆண்டுகளில் இந்திய வெளியுறவு அமைச்சர் அஜர்பைஜானுக்கு மேற்கொள்ளும் முதல் இரு தரப்பு பயணம் இதுவாகும்.

நேற்று காலை அஜர்பைஜான் சென்றடைந்த ஒன்றிய அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தலைநகர் பாகுவில், அஜர்பைஜான் அதிபர் இல்ஹாம் அலியேவ்வை சந்தித்து பேசினார். இதுகுறித்து ஒன்றிய அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தன் எக்ஸ் பதிவில், “நேற்று காலை பாகுவில் அஜர்பைஜான் அதிபர் இல்ஹாம் அலியேவ்வை சந்தித்ததில் மகிழ்ச்சி.

அவருக்கு பிரதமர் மோடியின் 'ாழ்த்துகளை தெரிவித்தேன். இந்தியா, அஜர்பைஜான் நாடுகளிடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து அதிபர் இல்ஹாம் அலியேவ்வுடன் விவாதித்தேன். இந்த கூட்டு முயற்சிக்கு அவர் தெரிவித்த நேர்மறையான எண்ணங்களை பாராட்டுகிறேன்” என தெரிவித்துள்ளார்.

# 2.2 ஜிகாவாட் சூரிய மின்கல ஆலையை அமைக்க நவிதாஸ் திட்டம்

சென்னை 25, அக்டோபர் 2026: இந்தியாவின் முன்னணி ஒருங்கிணைந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனங்களில் ஒன்றான நவிதாஸ், தனது சூரிய மின்கல உற்பத்தித் திட்டங்களை விரிவுபடுத்துவதற்காக, சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த தாக்க முதலீட்டு மேலாண்மை நிறுவனமான ரெஸ்பான்ஸ் அபிலிட்டியிடமிருந்து அதன் முதலீட்டாளர்கள் சார்பில் 2 கோடி அமெரிக்க டாலர் வரையிலான வளர்ச்சி நிதியைப் பெற்றுள்ளது. இதன் ஒரு பகுதியாக, இந்தியாவில் 2.2 ஜிகாவாட் திறன் கொண்ட சூரிய மின்கல உற்பத்தி ஆலையை அமைக்க நவிதாஸ் திட்டமிட்டுள்ளது.

இந்த முதலீடு, அதிக வளர்ச்சி வாய்ப்புள்ள சந்தைகளில் கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்தைக் கணிசமாகக் குறைப்பதுடன், சமூகத்திற்கும் நன்மை பயக்கும் வகையிலான தனியார் துறைத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் ரெஸ்பான்ஸ் அபிலிட்டியின் ஆசியப் பருவநிலை நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.




சூரிய மின்தகடுகள், அவற்றில் பயன்படுத்தப்படும் உறையிடும் பொருட்கள் உற்பத்தி, பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானச் சேவைகள் (இபிசி), மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகள் (பிஇஎஸ்எஸ்), புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி எனப் பல்வேறு துறைகளில் நவிதாஸ் செயல்பட்டு வருகிறது.

சூரிய மின்கல உற்பத்தியில் நுழைவதன் மூலம், உற்பத்திச் சங்கிலியின் முந்தைய கட்டங்களி லும் தனது செயல்பாடு களை விரிவுபடுத்தி, இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்க வும், உள்நாட்டு மதிப்புக் கூட்டலை அதிகரிக்க வும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதனுடன், சூரிய மின்கலங்களுக் கான சிலிக்கான் தகடு கள் (Wafer) மற்றும் சிலிக்கான் கட்டிகள் (Ingot) உற்பத்தியிலும் விரைவில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளது.

இந்த முதலீடு குறித்துப் பேசிய நவிதாஸ் நிறுவனத்தின் இயக்குநர் வினீத் மிட்டல், இந்தக் கூட்டாண்மை உள்நாட்டு விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துவதுடன், உயர் செயல்திறன் கொண்ட TOP Con மற்றும் பெரோவ்ஸ்கைட்-TOPCon கலப்புத் தொழில்நுட்ப மின்தகடுகள் உள்ளிட்ட மேம்பட்ட தொழில்நுட்பங்களை உருவாக்க உதவும் என்றார்.

நவிதாஸ் சோலார் நிறுவனத்தின் செயல்பாட்டுத் தலைவர் விஜய் மேனன், பொறுப்பான வளர்ச்சி, வலுவான நிர்வாகம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொறுப்பான வேலைவாய்ப்பு நடைமுறைகள் நிறுவனத்தின் நீண்டகால வளர்ச்சிக்கு முக்கியமானவை என்றார்.

நிதித் துறைத் தலைவர் கார்த்திக் ஜெயின், இந்த நிதி நிறுவனத்தின் நிதிச் செயல்திறனை வலுப்படுத்தி, செயல்பாடுகளை விரிவுபடுத்தவும், இந்தியாவின் தூய்மையான எரிசக்தி மாற்றத்திற்குப் பங்களிக்கவும் உதவும் என்றார்.

ரெஸ்பான்ஸ்அபிலிட்டியின் பருவநிலை உள்கட்டமைப்பு முதலீட்டுப் பிரிவின் முதன்மை அதிகாரி ஜெய் பாத்திஜா, சூரிய மின்கல உற்பத்தியில் நவிதாஸ் விரிவாக்கம் செய்வது, உற்பத்திச் சங்கிலியை மேலும் ஒருங்கிணைத்து நிறுவனத்தின் நீண்டகாலப் போட்டித்திறனை அதிகரிக்கும் இயல்பான அடுத்தகட்ட நடவடிக்கை என்றார். இந்த முதலீட்டுப் பரிவர்த்தனையில், மும்பையைச் சேர்ந்த சென்ட்ரம் கேப்பிட்டல் நிறுவனத்தின் உள்கட்டமைப்பு ஆலோசனை பிரிவு, நவிதாஸின் பிரத்யேக நிதி ஆலோசகராகச் செயல்பட்டது.

# கோவா ஏசஸ் ஜேஏ ரேசிங் அணியின் லுவிவே சம்புட்லா அபார வெற்றி புள்ளிப் பட்டியலில் முதலிடம் வகிக்கிறார்!

சென்னை 25, அக்டோபர் 2026: சென்னையில் உள்ள மெட்ராஸ் இன்டர்நேஷனல் சர்க்யூட்டில் அக்டோபர் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் 2026 இந்தியன் ரேசிங் திருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற எஃப்4 இந்தியன் சாம்பியன்ஷிப் 3-வது சுற்றில் விறுவிறுப்பான பந்தயங்கள், வியக்கத்தக்க திருப்புமுனைகள் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைகளும் அரங்கேறின. கோவா ஏசஸ் ஜேஏ ரேசிங் அணியின் லுவிவே சம்புட்லா இரண்டு போட்டிகளில் முதலிடம் பெற்றதோடு, மற்றொரு போட்டியில் மூன்றாம் இடத்தைப் பிடித்து இந்த வார இறுதியில் மிகச் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்தி சாம்பியன்ஷிப் - ன் புள்ளிகள் பட்டியலில் முன்னிலை பெற்றார். அதே வேளையில், கொல்கத்தா ராயல் டைகர்ஸ் அணியைச் சேர்ந்த 15 வயதான ஆரோன் மேத்தா, சாம்பியன்ஷிப் வரலாற்றில் மிகக் குறைந்த வயதில் பந்தயத்தை வென்று ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கிறார்.





சம்புட்லா 5-புள்ளிகள் பின்தங்கியிருந்த நிலையில், அதனை 21-புள்ளிகள் முன்னிலையாக மாற்றி, 138 புள்ளிகளுடன் கிச்சாஸ் கிங்ஸ் பெங்களூரு அணியின் ஆரிஸ் கிரியாகோவை (117 புள்ளிகள்) பின்னுக்குத் தள்ளினார். 3.717 கிலோமீட்டர் சுற்றளவில், சம்புட்லா தனது அசாத்திய வேகத்தையும் பந்தயத் திறனையும் வெளிப்படுத்தி, முதல் இரண்டு பந்தயங்களில் ஆறாவது இடத்திலிருந்து தொடங்கி வெற்றியைப் பதிவு செய்தார். ஸ்பீட் டீமென்ஸ் டெல்லி அணியின் என்டிசோ மபுண்டா மூன்று பந்தயங்களிலும் இரண்டாவது இடத்தைப் பிடித்து அசத்தினார். இறுதிப் பந்தயத்தில் கடும் அழுத்தமும், போட்டியும் இருந்த போதிலும், முதல் வெற்றியை பதிவுசெய்து தனது திறனை மேத்தா நிரூபித்தார். எட்டு உரிமையாளர் அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 16 ரேஸ் ஓட்டுநர்கள் சென்னையில் களமிறங்கியபோது, கிரியாகோவ் புள்ளிப் பட்டியலில் முன்னிலையில் இருந்தார். இருப்பினும், சவாலான ஈரப்பதமான வானிலை மற்றும் கடுமையான போட்டிகள் சாம்பியன்ஷிப் பட்டத்திற்கான யுத்த சூழலை விரைவாக மாற்றியமைத்தன.

முதல் பந்தயத்தின் தொடக்கத்தில் முன்னிலை பெற்ற கிரியாகோவ் - க்கு இணையாக மேத்தாவும் பயணித்தார்; சம்புட்லா முதல் லேப் - ல் இரண்டு இடங்கள் முன்னேறினார். ஈரப்பதமான தரைப்பரப்பு ரேஸ் ஓட்டுநர்களுக்கு சவாலாக இருந்த நிலையில், சம்புட்லா மேத்தாவைக் கடந்து, இரண்டாவது இடத்திற்கு முன்னேறினார் பின்னர் 9-வது சுற்றில் கிரியாகோவ் தனது காரின் பின்புறப் பிடியை இழந்ததை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திய மேத்தா முன்னிலை பெற்றார்.

ஸ்பீட் டீமென்ஸ் டெல்லிக்காக பத்தாவது இடத்திலிருந்து தொடங்கிய என்டிசோ மபுண்டா, மேத்தா மற்றும் கிரியாகோவை முந்தி இரண்டாவது இடத்திற்கு முன்னேறினார். அதே வேளையில் கோவா ஏசஸ் ஜேஏ ரேசிங் அணியின் ஆர்யன் நரோலாவும் முன்னணி இடங்களுக்கான போட்டியில் இணைந்தார்.

# டிரைவிங் லைசென்ஸ் விதிகளில் மாற்றம் இந்தியர்கள், வெளிநாட்டவருக்கு தனித்தனி நிறத்தில் ஓட்டுனர் உரிமம்

சென்னை 25, அக்டோபர் 2026: இந்தியக் குடிமக்கள் மற்றும் வெளிநாட்டினருக்கு வழங்கப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் ஓட்டுனர் உரிமங்களுக்கு வெவ்வேறு நிறங்களை அறிமுகப்படுத்த சாலைப் போக்குவரத்து அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

மோட்டார் வாகன விதிகளில் மாற்றங்கள் கொண்டு வருவதற்கு சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.

மோட்டார் வாகன விதிகளில் கொண்டு வரப்படவுள்ள திருத்தங்கள் குறித்த வரைவு அறிக்கையில், ஓட்டுனர் உரிமத்தில் உரிமம் பெற்றவரின் ரத்த வகை, அலைபேசி எண் மற்றும் அவசர காலத் தொடர்பு எண்கள் குறிப்பிடுவது கட்டாயமாக்கப்படும்.




வயது மற்றும் முகவரிக்கான சான்றாக நிர்வாக நீதிபதி அல்லது நோட்டரி முன்னிலையில் உறுதிமொழிப் பத்திரம் சமர்ப்பிக்கும் முறையை நீக்கப்படும்.

உரிமம் வழங்கும் அதிகார அமைப்பால் வழங்கப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் ஒவ்வொரு ஓட்டுனர் உரிமமும் படிவம் 7-ன் கீழ் லேமினேட் செய்யப்பட்ட அல்லது பாலிவினைல் குளோரைடு அட்டையாக இருக்க வேண்டும். இதில் இந்தியக் குடிமக்கள் மற்றும் வெளிநாட்டினருக்கான ஓட்டுனர் உரிமங்களுக்குத் தனித்தனி வடிவங்கள் இடம்பெற வேண்டும்.

முறைகேடுகளை தடுக்கும் வகையில் வயது மற்றும் முகவரிக்கான சான்றுகளாக உறுதிமொழிப் பத்திரங்கள் மற்றும் ஆயுள் காப்பீட்டு ஆவணங்களை ஏற்றுக்கொள்வதற்கும் அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.

பாதுகாப்பாக ஓட்டுதல் குறித்த பயிற்சி மதிப்பீட்டில் தேர்ச்சி பெறுவதற்கான தகுதியானது 60 சதவீதத்தில் இருந்து 75சதவீதமாக உயர்த்தப்படும். ஆதார் அங்கீகாரத்தின் மூலம் இணையவழியில் பெறப்படும் சில ஓட்டுனர் உரிமச் சேவைகளுக்கு கட்டண விலக்கு அளிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

# "கொள்ளை அடிப்பது தான் டம்மி சிஎம் சொன்ன மாற்றமா?" - எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி

சென்னை 25, அக்டோபர் 2026: 'மக்களுக்கான கட்டணமில்லா அரிசியை பாலிஷ் போட்டு 30 ரூபாய்க்கு விற்று கொள்ளை அடிப்பது தான் டம்மி சிம் சொன்ன மாற்றமா?' என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் எக்ஸ் தளத்தில் பத்திவிட்டுள்ளதாவது; "அரிசி விலையேற்றத்துக்கான தீர்வாக, கூட்டுறவு அங்காடிகளில் சன்னரகப் பொன்னி அரிசியை ரூ.30-க்கு வாங்கலாம் என்று இந்த அரசு அறிவித்தது. அதை நம்பி ரேஷன் கடைகளுக்குப் போனால், வழக்கமாக வழங்கப்படும் கட்டணமில்லா அரிசியை பாலிஷ் போட்டு, சன்னரகப் பொன்னி அரிசி என்று விற்கப் படுவதாக தமிழ்நாடெங்கும் பொது மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். பல இடங்களில் அரிசியை திருப்பிக் கொடுத்தும் வருகின்றனர்.

கம்பத்தில் பாலிஷ் செய்யப் பட்ட அரிசி வழங்கப் பட்டதால், த.வெ.க எம்.எல்.ஏ.வை முற்றுகையிட்டு பொது மக்கள் கேள்வி எழுப்பிய போது, கரூர் பாணியில் ஓட்டெமெடுத்து இருக்கிறார் அந்த எம்எல்ஏ.

தமிழ்நாட்டில் 2 கோடியே 28 லட்சம் குடும்ப அட்டைகள் இருக்கும் போது, வெறும் 250 இடங்களில் - அதுவும் குடும்பத்துக்கு தலா 5 கிலோ மட்டும் என, சன்ன ரகப் பொன்னி என்ற பெயரில் பாலிஷ் செய்யப்பட்ட அரிசி வழங்கப்படுவதாக தொடர்ந்து புகார்கள் வருகின்றன.



2007-ல் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்த போது, அன்றைய முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தை அறிவித்து, வெளிப்படையான முறையில் டெண்டர் விட்டு, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, உள்ளிட்ட பொருட்களை மானிய விலையில் மக்களுக்கு வழங்கினார்கள். ஆனால், இந்த கோமாளி அரசு, சன்ன ரகப் பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்வதற்கு எப்போது டெண்டர் விட்டது? டெண்டர் எடுத்த நிறுவனங்கள் எவை?

என்ன விலைக்கு அவர்கள் அரசுக்கு பொன்னி அரிசியை வழங்கினார்கள்? த.வெ.க அரசு பொது மக்களுக்கு எவ்வளவு மானிய விலையில் அரிசியை வழங்குகிறது? இது குறித்து பாலிஷ் எதுவும் போடாமல் வெளிப்படைத்தன்மையுடன் இந்த ஆட்சியாளர்கள் பதிலளிக்க வேண்டும்" என பதிவிட்டுள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

# ஸ்ரீ கார்த்திக் இயக்கத்தில் உருவாகும் புதிய தமிழ் படத்தில் இணைந்தார் ருக்மிணி வசந்த்!




சென்னை 25, அக்டோபர் 2026: 'சப்த சாகரதாச்சே எல்லோ' மற்றும் 'காந்தாரா: சாப்டர் 1' படங்களின் மூலம் கவனம் ஈர்த்த ருக்மிணி வசந்த், 'கணம்' பட இயக்குநர் ஸ்ரீ கார்த்திக்குடன் முதன்முறையாக இணைகிறார். தேவ் ராம்நாத், விநாயக் வைத்யநாதன் நடிக்கும் இப்படத்தை மேட்பாய்ஸ் என்டர்டெயின்மென்ட் மற்றும் சிருனி சினி கார்ப்பரேஷன் இணைந்து தயாரிக்கின்றன. இந்தப் படத்தை சாய் கிருஷ்ணா கட்வால் இணைந்து தயாரிக்கிறார்.

'சப்த சாகரதாச்சே எல்லோ', 'காந்தாரா: சாப்டர் 1' ஆகிய படங்களில் தனது நடிப்பால் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்த ருக்மிணி வசந்த், தற்போது 'கணம்' படத்தின் இயக்குநர் ஸ்ரீ கார்த்திக் இயக்கத்தில் உருவாகும் புதிய தமிழ் படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். இன்னும் தலைப்பிடப்படாத இந்தப் படத்தில் ருக்மிணி வசந்துடன் இணைந்து தேவ் ராம்நாத் மற்றும் விநாயக் வைத்யநாதன் ஆகியோரும் முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். ருக்மிணி வசந்த் மற்றும் ஸ்ரீ கார்த்திக் இணையும் முதல் திரைப்படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

காலப்பயணம் எனும் புதுமையான கற்பனை கருவுடன், தாய் - மகன் உறவின் உணர்வுப்பூர்வமான ஆழத்தையும் இணைத்து உருவான 'கணம்' திரைப்படத்தை தொடர்ந்து, ஸ்ரீ கார்த்திக் தனது அடுத்த படைப்பின் மூலம் புதிய கதைக்களத்தையும், வித்தியாசமான கலைஞர்களின் கூட்டணியையும் ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

இந்தப் படத்தின் அறிவிப்பை வித்தியாசமான முறையில் வெளியிட்டுள்ள படக்குழு, ருக்மிணி வசந்த் ஏற்று நடிக்கும் 'தாரா' கதாபாத்திரத்தை அறிமுகப்படுத்தும் பிரத்யேக அறிவிப்பு வீடியோவையும் வெளியிட்டுள்ளது. இந்த வீடியோவில் ஸ்ரீ கார்த்திக், தேவ் ராம்நாத் மற்றும் விநாயக் வைத்யநாதன் ஆகியோர் 'தாரா' கதாபாத்திரத்திற்கான இறுதி தேர்வில் ஈடுபடுகின்றனர். அந்த சூழலில் எதிர்பாராத விதமாக வரும் ஓர் அறிவிப்பு அவர்களை திகைக்க வைக்கிறது. தொடர்ந்து, ருக்மிணி வசந்த் அறிமுக மாகும் காட்சியுடன் வீடியோ நிறைவடை கிறது. இதன் மூலம் படத்தின் உலகம் குறித்த முதல் பார்வையை ரசிகர்களுக்கு வழங்கியிருக்கிறது படக்குழு.

பட அறிவிப்பை வெளியிடுவதிலும் புதுமையான அணுகுமுறையை கையாண்டுள்ள மேட்பாய்ஸ் என்டர்டெயின்மென்ட் நிறுவனம், கடந்த 18 மாதங்களில் எதிர் கொண்ட ஏற்ற தாழ்வுகள், சவால்கள் மற்றும் அனுபவங்களை மையமாக கொண்டு, இன்ஸ்டாகிராமில் பிரத்யேகமாக ஒளிபரப்பப்படும் கற்பனை கலந்த ஆவண தொடர் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இதுவரை ஒன்பது அத்தியாயங்களை கடந்துள்ள இந்த தொடர் நிஜ அனுபவங்களையும் கற்பனை வடிவிலான காட்சிகளையும் இணைத்து, இறுதியில் ருக்மிணி வசந்த் 'தாரா' கதாபாத்திரத்தில் நடிப்பதை வெளிப்படுத்தியுள்ளது. படைப்பாற்றலுக்கும் வழக்கத்திற்கு மாறான கதை சொல்லல் முறைக்கும் முக்கியத்துவம் அளிக்கும் மேட்பாய்ஸ் என்டர்டெயின்மென்ட் நிறுவனத்தின் தனித்துவமான முயற்சியாக இது அமைந்துள்ளது.

# 'ஏகன் நடிப்பில் வெளியாகியுள்ள 'ஹைக்கூ' திரைப்படத்தில் மௌனமான ஒரு கதாபாத்திரமாக இசையை கொண்டு வரும் வாய்ப்பு கிடைத்தது!" - இசையமைப்பாளர் சித்து குமார்



சென்னை 25, அக்டோபர் 2026: 'சிவப்பு மஞ்சள் பச்சை' படத்தின் 'உசுரே', 'மயிலாஞ்சியே', 'இது தான்', 'ஜோ' படத்தின் 'உருகி உருகி', 'ஆரோமலே' படத்தின் 'எப்படி வந்தாயோ' என ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த பல பாடல்களை கொடுத்தவர் இசையமைப்பாளர் சித்து குமார். காதலை உணர்வுப்பூர்வமாக இசை மூலம் வெளிப்படுத்துவதிலும் இவர் திறமையாளர் என்பதை 'தீராக் காதல்' போன்ற படங்களிலும் நிரூபித்துள்ளார்.

தற்போது, யுவராஜ் சின்னசாமி எழுதி இயக்கியுள்ள 'ஹைக்கூ' படத்திற்கு இசையமைத்துள்ளார். காதல் கலந்த நகைச்சுவைப் படமாக உருவாகியுள்ள இப்படம், இன்று (அக்டோபர் 23) உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகியுள்ளது. படத்தின் பாடல்கள் ஏற்கெனவே இசை ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில், படத்தை முன்னோட்டக் காட்சிகளில் பார்த்த விமர்சகர்கள் மற்றும் ரசிகர்களிடமிருந்தும் பாடல்கள், பின்னணி இசை ஆகியவற்றுக்குப் பாராட்டுகள் கிடைத்து வருகின்றன. இதனால் சித்து குமார் மகிழ்ச்சியடைந்துள்ளார்.

'ஹைக்கூ' படத்தின் இசைப் பயணம் குறித்துப் பேசிய இசையமைப்பாளர் சித்து குமார் பகிர்ந்து கொண்டதாவது, "யுவராஜ் சின்னசாமி 'ஹைக்கூ' படத்தின் கதையைச் சொன்னபோதே, அதில் இசைக்கு மிகப்பெரிய வாய்ப்பு இருப்பதை என்னால் உணர முடிந்தது. அதே நேரத்தில், சில சவால்களும் இருந்தன. காதல் கதைகள் எப்போதுமே இசையமைப்பாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். ஏனெனில், மனதில் நிற்கும் இனிமையான மெலடிகளை உருவாக்குவதற்குப் பல வாய்ப்புகள் கிடைக்கும். அதே சமயம், கதாபாத்திரங்களின் உணர்வுகளுக்குத் துணையாக இசை இருக்க வேண்டுமே தவிர, அவற்றைத் தாண்டி ஆதிக்கம் செலுத்திவிடக் கூடாது.

'ஹைக்கூ' படத்தைப் பொறுத்தவரை, இசை திரைக்கதையின் ஒரு அங்கமாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தோம். கிட்டத்தட்ட படத்தில் வரும் ஒரு கதாபாத்திரத்தைப் போல மௌனமாக இசை செயல்பட வேண்டும் என்பதே எங்களது நோக்கம். இதற்காகப் பல்வேறு இசை வடிவங்களையும், மாற்றங்களையும் முயற்சி செய்து பார்த்தேன். ஒவ்வொரு பாடலும், ஒவ்வொரு இசைக் குறிப்பும் கதையின் உணர்வுகளுக்கும் அதன் நகர்வுக்கும் உதவ வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். இதற்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, படத்துக்குப் பொருத்தமான இசையை உருவாக்குவதற்கான சுதந்திரத்தை வழங்கிய இயக்குநருக்கும் தயாரிப்பாளர்களுக்கும் நன்றி.

உலகப் புகழ்பெற்ற புடாபெஸ்டில் இப்படத்தின் பின்னணி இசையைப் பதிவு செய்யும் வாய்ப்பு கிடைத்தது மிகப் பெரிய வரப்பிரசாதம். இசைஞானி இளையராஜா, இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மான் உள்ளிட்ட பல இசை மேதைகள் தங்களது மகத்தான இசைப் படைப்புகளை உருவாக்கிய இடத்தில் எங்களது படத்தின் பின்னணி இசையையும் பதிவு செய்தது சிறப்பான அனுபவமாக இருந்தது.

படத்தின் முன்னோட்டக் காட்சிகளைப் பார்த்தவர்களிடமிருந்து பாடல்களுக்கும் பின்னணி இசைக்கும் கிடைத்து வரும் வரவேற்பு உண்மையிலேயே மகிழ்ச்சியளிக்கிறது. மிகுந்த கவனத்துடனும் அக்கறையுடனும் இந்தப் படத்தின் இசையை உருவாக்கியிருக்கிறோம். 'ஹைக்கூ' படத்தைத் திரையரங்குகளில் பார்க்கும்போது, ரசிகர்களுக்கு அழகான இசை அனுபவம் கிடைக்கும் என்று நம்புகிறேன்" என்றார்.

# டெல்டாவில் 4வது நாளாக கன மழை; 1,500 ஏக்கர் சம்பா பயிர் மூழ்கியது 9,000 ஏக்கரில் உப்பு உற்பத்தி பாதிப்பு

சென்னை 25, அக்டோபர் 2026: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கிய நாள் முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. நாகை, திருவாரூர் மாவட்டங்களில் 4ம் நாளாக நேற்றிரவும் கன மழை பெய்தது. தஞ்சையில் நேற்று நள்ளிரவு கனமழை பெய்தது. கரூரில் நேற்று இரவு 7 மணி முதல் 9 மணி வரை பலத்த மழை கொட்டியது. புதுக்கோட்டையில் நேற்றிரவு சுமார் 2 மணி நேரம் பலத்த மழை பெய்தது. அரியலூர் அருகே தா.பழூர் சிந்தாமணியில் சாலையோரம் இருந்த புளியமரம் சாய்ந்து மின்கம்பிகள் மீது விழுந்தது. இதனால் அந்த பகுதியில் இரவு 10.30 மணி முதல் இன்று காலை வரை மின்சாரம் தடை செய்யப்பட்டிருந்தது. இதனால் மக்கள் அவதிக்குள்ளாகினர்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ஒன்றியத்தில் 700 ஏக்கர், கோட்டூர் ஒன்றியத்தில் 175 ஏக்கர், குடவாசல் ஒன்றியத்தில் 75 ஏக்கர், கொரடாச்சேரி ஒன்றியத்தில் எட்டியலூர் உள்ளிட்ட பகுதிகளில் 5 ஏக்கர், நாகை மாவட்டம் தலைஞாயிறு பகுதிகளில் 70 ஏக்கர், திருச்சி திருவளர் சோலை உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 500 ஏக்கர் என சுமார் 1500 ஏக்கர் இளம் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கி உள்ளன.

2 பெண்கள் பலி;

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அடுத்த 78 நல்லூர் கிராமம் ஆற்றங்கரையை சேர்ந்த வடிவேல் மனைவி முத்தம்மாள் (55). அதே பகுதியில் வயலில் களை எடுக்க சென்றுவிட்டு மாலை 5.30 மணியளவில் வீட்டுக்கு வரப்பில் நடந்து வந்தார். அப்போது பெய்த மழையில் மின்னல் தாக்கியதில் படுகாயமடைந்த அவர் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் இறந்தார்.

இதேபோல் மழையின் காரணமாக திருவாரூர் தாலுகா வைப்பூர் அடுத்த திருப்பள்ளிமுக்கூடலை சேர்ந்த தியாகராஜன் (65), இவரது மனைவி ராகினி(60) ஆடுகளை மேய்க்க சென்றபோது ஒரு வீட்டின் சுவரில் கைவைத்தபோது மின்சாரம் பாய்ந்ததில் ராகினி அந்த இடத்திலேயே பலியானார்.

உப்பு உற்பத்தி நிறுத்தம்; நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த அகஸ்தியன்பள்ளி, கடினல்வயல், கோடியக்காடு உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் 9000 ஏக்கரில் உப்பு உற்பத்தி நடைபெற்றது. கடந்த 3 மாதமாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் உப்பு உற்பத்தி முழு வீச்சில் நடைபெற்று வந்தது. இந்தநிலையில் உப்பு பாத்திகளில் மழைநீர் தேங்கி உள்ளது. இதனால் உப்பு உற்பத்தி முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

# "'ஹைக்கூ' திரைப்படத்தில் நான் நடித்த கதாபாத்திரம் என் மனதுக்கு நெருக்கமானது" - நடிகை ஸ்ரீதேவி!



சென்னை 25, அக்டோபர் 2026: படப்பிடிப்பு முடிந்த பிறகும் சில கதாபாத்திரங்கள் நடிகர்களின் மனதை விட்டு எளிதில் நீங்குவதில்லை. நடிகை ஸ்ரீதேவிக்கு 'ஹைக்கூ' திரைப்படம் அப்படியொரு அனுபவமாக அமைந்துள்ளது. தெலுங்கில் அறிமுகமான 'கோர்ட்: ஸ்டேட் வெர்சஸ் நோபடி' படத்தின் மூலம் கவனம் ஈர்த்த ஸ்ரீதேவி, யுவராஜ் சின்னசாமி இயக்கத்தில், அக்டோபர் 23 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியான 'ஹைக்கூ' திரைப்படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் அறிமுகமாகியுள்ளார். பத்திரிகையாளர்கள், ஊடகத்தினருக்காகத் திரையிடப்பட்ட முன்னோட்டக் காட்சிகள் மற்றும் திரையரங்குகளில் படம் பார்த்த ரசிகர்களும் தனது நடிப்பை பாராட்டி வருவது மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்துள்ளார் ஸ்ரீதேவி.

படம் குறித்து ஸ்ரீதேவி பகிர்ந்து கொண்டதாவது, "'ஹைக்கூ' படத்தில் என்னுடைய கதாபாத்திரம் ரசிகர்களுக்கு நிச்சயம் பிடிக்கும் என எதிர்பார்த்தேன். நான் எதிர்பார்த்தது போலவே, படத்தின் முன்னோட்டக் காட்சிகளிலேயே, குறிப்பாகப் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகத்தினரிடமிருந்தும் ரசிகர்களிடம் இருந்தும் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. ஒரு நடிகையாக நம் பணியை ரசிகர்கள் கொண்டாடுவதுதான் நமக்கு மனநிறைவு தரும். அந்த உணர்வை 'ஹைக்கூ' திரைப்படம் வெளியாவதற்கு முன்பும் வெளியான பின்பும் கொடுத்திருக்கிறது".

மேலும், "இயக்குநர் யுவராஜ் கதையைச் சொன்னபோதே என் கதாபாத்திரத்தில் உணர்வுப்பூர்வமான பல அடுக்குகள் இருப்பதை உணர்ந்தேன். சில நாட்களில் படப்பிடிப்பை முடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினாலும், டப்பிங் பணிகளை முடித்த பிறகும் கூட அந்தக் கதாபாத்திரத்திலிருந்து என்னால் எளிதாக வெளிவர முடியவில்லை. அந்தக் கதாபாத்திரத்தை இன்னும் என்னுள் சுமந்து கொண்டிருக்கிறேன். அந்த வகையில், 'ஹைக்கூ' திரைப்படத்தில் நடித்த அனுபவம் எனக்கு பொக்கிஷம். இந்த வாய்ப்பை எனக்கு கொடுத்த தயாரிப்பாளர்களுக்கும் இயக்குநருக்கும் உடன் பணிபுரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்" என்றார்.

## யோகி பாபு நடிக்கும் 'சிங்காரம்' திரைப்பட இசை வெளியீட்டு விழா! அக்டோபர் 30-ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் 'சிங்காரம்' திரைப்படம்!

சென்னை 25, அக்டோபர் 2026: ராக் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில், யோகி பாபு கதாநாயகனாக நடித்துள்ள 'சிங்காரம்' திரைப்படத்தை இயக்குநர் கே.வி. கதிர்வேலு இயக்கியுள்ளார். ஏ.எஸ். ரமண பாலாஜி மற்றும் பத்மாவதி காந்தி தயாரித்துள்ள இப்படத்திற்கு சாம் சி.எஸ். இசையமைத்துள்ளார். ஏற்கெனவே இப்படத்தின் டீசர் வெளியாகி கவனம் பெற்ற நிலையில், தற்போது இசை வெளியீட்டு விழாவை முன்னிட்டு டிரெய்லரும் வெளியிடப்பட்டுள்ளது. வரும் அக்டோபர் 30-ஆம் தேதி இப்படம் உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

நரிக்குறவர் சமூகத்தின் வாழ்வியல், வரலாற்றுப் பின்னணி, சமூகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் புறக்கணிப்புகள் மற்றும் உரிமைக்கான குரல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு 'சிங்காரம்' உருவாகியுள்ளது. நரிக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் அரசியலில் ஈடுபட்டு சட்டமன்ற உறுப்பினராக உயர்வதை மையமாகக் கொண்டுள்ள இப்படம், சமூக விழிப்புணர்வுடன் நகைச்சுவை மற்றும் குடும்ப உணர்வுகளையும் இணைத்துப் பேசுகிறது.

விழாவில் இயக்குநர், தயாரிப்பாளர்கள், நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் படத்தின் உருவாக்க அனுபவங்களையும், அதன் பின்னணியையும் பகிர்ந்துகொண்டனர்.

இயக்குநர் கே.வி. கதிர்வேலு பேசுகையில், நரிக்குறவர் சமூகத்தினரின் வரலாறு மற்றும் பின்னணியை அறிந்துகொள்வதற்காக விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு இப்படத்தை உருவாக்கியுள்ளதாகத் தெரிவித்தார். சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், அதிகாரம் கொண்டவர்களுக்கு அளிக்கப்படும் மரியாதை, மற்றவர்கள் புறக்கணிக்கப்படுவது போன்ற பிரச்சினைகளையும் இப்படம் பேசுவதாகக் குறிப்பிட்டார். நரிக்குறவர் சமூகத்தின் வரலாற்றுடன் அரசியல் சார்ந்த அம்சங்களும் இடம் பெற்றுள்ளதாகவும், சமூகக் கருத்துகளுடன் குடும்பத்துடன் இணைந்து ரசிக்கக் கூடிய படமாக 'சிங்காரம்' உருவாகியுள்ளதாகவும் கூறி, அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.




நடிகர் யோகி பாபு பேசுகையில், இப்படத்தில் நடிக்க வாய்ப்பளித்த இயக்குநர் கே.வி. கதிர்வேலு, ரமண பாலாஜி உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவித்தார். மறைந்த நடிகர்கள் மனோபாலா மற்றும் மாரிமுத்து ஆகியோரை நினைவுகூர்ந்த அவர், மனோபாலா தனக்கு எப்போதும் ஆதரவாக இருந்தவர் என்று குறிப்பிட்டார். தன்னை நம்பி வாய்ப்பளித்த படக்குழுவினரின் ஊக்கமும் நம்பிக்கையும் முக்கியமானவை என்று தெரிவித்ததுடன், வரும் அக்டோபர் 30-ஆம் தேதி வெளியாகும் 'சிங்காரம்' திரைப்படத்தைத் திரையரங்குகளில் பார்த்து ஆதரிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

'சிங்காரம்' திரைப்படம் வரும் அக்டோபர் 30-ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகவுள்ள நிலையில், சமூகப் பின்னணியையும் நகைச்சுவை மற்றும் குடும்ப உணர்வுகளையும் இணைத்துள்ள இப்படம் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

நடிகர்கள்:

யோகி பாபு, வேல ராமமூர்த்தி, எம்.எஸ். பாஸ்கர், மரியா வின்சென்ட், சார்ம்ஸ், ஆர்த்தி கணேஷ், மனோபாலா, கல்கி, மாரிமுத்து, படவா கோபி, சென்ட்ராயன், டி.எஸ்.ஆர்., தீபா சங்கர், சபிதா ராய், ஜாவா சுந்தரேசன், கே.எம். கணேஷ்கர் மற்றும் பலர்.

தொழில்நுட்பக் கலைஞர்கள்:

தயாரிப்பு நிறுவனம் - ராக் புரொடக்ஷன்ஸ், தயாரிப்பாளர்கள் - ஏ.எஸ். ரமண பாலாஜி, பத்மாவதி காந்தி, எழுத்து மற்றும் இயக்கம் - கே.வி. கதிர்வேலு, இசை - சாம் சி.எஸ்., பாடல்கள் - விவேகா, ஒளிப்பதிவு - பிரசன்னா எஸ். குமார், படத்தொகுப்பு - லாரன்ஸ் கிஷோர், கலை இயக்கம் - குருராஜ், சண்டைப் பயிற்சி - ஃபேன்டம் பிரதீப், மக்கள் தொடர்பு - ரியாஸ் கே அஹ்மத், பாரஸ் ரியாஸ்

## அருணாச்சல பிரதேசத்தில் சீன ராணுவம் அத்துமீறல் எல்லையில் மீண்டும் பதற்றம்: அமைதிக்கு முக்கியத்துவம் அளிக்க இந்தியா வலியுறுத்தல்

சென்னை 25, அக்டோபர் 2026: அருணாசல பிரதேசத்தின் எல்லைப் பகுதிகளில் சீனப் படைகளுடன் தொடர்ந்து நேருக்கு நேர் மோதல்கள் ஏற்பட்டு வருவதாக இந்தோ-திபெத் எல்லைக் காவல் படைத் தலைவர் சத்ருஜீத் கபூர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் அனைத்து எல்லை பகுதிகளிலும் ஆளில்லா விமானப் படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், கல்வான் போன்ற மோதல்களை எதிர்கொள்ளும் வகையில் புதிய பயிற்சித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



இந்நிலையில், டெல்லியில் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியதாவது: இந்தியா - சீனா எல்லைப் பகுதிகளில் சீனப் படைகள் வழக்கமான ரோந்துப் பாதைகளிலிருந்து விலகும் போது நிலைமை அவ்வப்போது பாதிக்கப்படுகிறது. எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் நிலுவையில் உள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும், தவறான புரிதல்கள் மற்றும் தவறான கணிப்புகளைத் தவிர்க்கவும் இரு நாடுகளும் ஏற்கெனவே உள்ள ராஜீய மற்றும் ராணுவ வழிமுறைகளைப் பயன்படுத்தி வருகின்றன.

எல்லை நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், சில பகுதிகளில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு குறித்த புரிதலை மேம்படுத்துவது தொடர்பாகவும் இரு நாடுகளும் விவாதிக்க ஒப்புக் கொண்டுள்ளன. எல்லைப் பகுதிகளில் அமைதியைப் பராமரிப்பது இருதரப்பு உறவுகளின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு அவசியமாகும். இவ்வாறு ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.

## "'ஹைக்கூ' திரைப்படத்தில் எனது கதாபாத்திரம் பெண்களின் ஆழமான உணர்வுகளைப் பிரதிபலிக்கிறது"- நடிகை ஃபெமினா ஜார்ஜ்!

சென்னை 25, அக்டோபர் 2026: வசீகரமான தோற்றம் மற்றும் திறமையான நடிப்பால் ரசிகர்களை ஈர்த்துள்ள நடிகை ஃபெமினா ஜார்ஜ், 'ஹைக்கூ' படத்தின் மூலம் ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்தும் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ஏகன், ஸ்ரீதேவி மற்றும் ஃபெமினா ஜார்ஜ் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்துள்ள இந்தத் திரைப்படம் இன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகியுள்ளது. பெண்களின் உணர்வுகள் தலைமுறைகளைக் கடந்தும் மாறாமல் இருப்பது குறித்தும், யுவராஜ் சின்னசாமி இயக்கியுள்ள இப்படத்தில் தனக்குக் கிடைத்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த கதாபாத்திரம் குறித்தும், தமிழ்த் திரையுலகில் அறிமுகமாவது குறித்த அனுபவங்களையும் பகிர்ந்துகொள்கிறார் நடிகை ஃபெமினா ஜார்ஜ்.

தனது கதாபாத்திரம் குறித்துப் பேசிய நடிகை ஃபெமினா ஜார்ஜ் பகிர்ந்து கொண்டதாவது, "தமிழ்த் திரையுலகில் அறிமுகமாவது எனது கனவாக இருந்தது. அந்த வாய்ப்பு 'ஹைக்கூ' போன்ற நம்பிக்கையளிக்கும் படத்தின் மூலம் கிடைத்திருப்பதுடன், உணர்வுப்பூர்வமான பல அடுக்குகளைக் கொண்ட முக்கியத்துவம் வாய்ந்த கதாபாத்திரத்தில் நடிக்கவும் வாய்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சி. எனது கதாபாத்திரம் பெண்களின் ஆழமான உணர்வுகளைப் பிரதிபலிக்கிறது. காலம் மாறும்போது பெண்களின் இயல்பும் எதிர்பார்ப்புகளும் மாறிவிடுவதாகப் பலரும் நினைக்கிறார்கள். ஆனால், இத்தனை மாற்றங்களுக்குப் பின்னாலும் சில உணர்வுகள் காலத்தால் அழியாமல் அப்படியே நிலைத்திருக்கின்றன என்பதே எனது கருத்து.



ஒரு பெண்ணின் உணர்வுகள், தான் பெற வேண்டும் என்று விரும்பும் அன்பு, ஓர் ஆணிடம் அவள் எதிர்பார்க்கும் குணங்கள் ஆகியவை தலைமுறைகள் மாறினாலும் பெரிதாக மாறுவதில்லை. இதுவே 'ஹைக்கூ' படத்தில் என் கதாபாத்திரத்தின் சுருக்கம். இதுபோன்ற உணர்வுகள் பெரும்பாலும் பெண் இயக்குநர்களின் பார்வையில் படமாக்கப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். என் மீது நம்பிக்கை வைத்து இந்த வாய்ப்பு கொடுத்த தயாரிப்பாளர்கள், இயக்குநர் மற்றும் ஒட்டுமொத்த படக்குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'ஹைக்கூ' படத்தைப் பார்த்துவிட்டு ரசிகர்கள் முகத்தில் புன்னகையுடனும், கண்களில் லேசான கண்ணீருடனும், திரையரங்கை விட்டு வெளியேற வேண்டும் என்று விரும்புகிறேன். அந்த உணர்வுகள் திரையரங்கை விட்டு வெளியேறிய பிறகும் அவர்களுடன் இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை, ஒரு திரைப்படத்தின் அழகே அதுதான். அது நமக்குள் இருக்கும் ஏதாவது ஒரு உணர்வை தூண்டி, மகிழ்ச்சியான மனதுடன் நம்மை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்" என்றார்.

## ஜோஜு ஜார்ஜ் இயக்கும் புதிய படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீடு

சென்னை 25, அக்டோபர் 2026: 'பணி' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, நடிகர் ஜோஜு ஜார்ஜ் எழுதி இயக்கும் புதிய படமான 'பரிபாடி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. காவ்யா ஃபிலிம் கம்பெனி சார்பில் வேணு குன்னப்பள்ளி தயாரிக்கும் இப்படம், பிரம்மாண்டமான பொருட்செலவில் உருவாகியுள்ளது.

இந்தப் படத்தில் ஜோஜு ஜார்ஜ் கதாநாயகனாக நடிப்பதோடு, சுமார் 100 புதிய முகங்கள் முக்கியமான கதாபாத்திரங்களில் அறிமுகமாகின்றனர். இப்படம் வருகிற டிசம்பர் மாதம் உலகளவில் திரையரங்குகளில் வெளியாக வுள்ளது. திரிசூரை பின்னணியாக கொண்டு, முக்கியமாக சாலக்குடியில் படமாக்கப்பட்டுள்ள இப்படத்திற்காக, புதிய நடிகர்கள் சுமார் நான்கு மாத காலம் சிறப்பு பயிற்சிக்கு பிறகே கேமராவுக்கு முன்பு களமிறங்கினர். இப் படத்தில் நடிக்கும் சுமார் 100 புதிய முகங்களும் வசனம் பேசும் முக்கிய கதாபாத்திரங்களை ஏற்றுள்ளனர். ரசிகர்களுக்கு முற்றிலும் மாறுபட்ட திரையரங்க அனுபவத்தை தரும் வகையில் இப்படம் பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்டு வருகிறது. தற்போது படத்தின் போஸ்ட்-புரொடக்ஷன் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்திய சினிமாவின் முன்னணி தொழில்நுட்ப கலைஞர்கள் பலரும் இப்படத்தில் இணைந்துள்ளனர். புகழ்பெற்ற ஒளிப்பதிவாளர் ராஜீவ் ரவி ஒளிப்பதிவு செய்ய, பிரபல தமிழ் இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜா இந்தப் படத்திற்கு இசையமைக்கிறார். இதன் மூலம் அவர் மலையாள திரையுலகில் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார்.

மேலும், தென்னிந்தியாவின் பிரபல சண்டை பயிற்சி இயக்குநர்களான அன்பறிவ் மாஸ்டர்ஸ் சண்டைக் காட்சிகளை வடிவமைத்துள்ளனர். இவர்களுடன் படத்தொகுப்பாளர் மனு ஆண்டனி மற்றும் சவுண்ட் டிசைனர் அஜயன் அதத் ஆகியோரும் தொழில்நுட்ப குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

2024-இல் வெளியாகி மாபெரும் பாக்ஸ் ஆஃபிஸ் வெற்றியையும், ரசிகர்களின் பாராட்டுக்களையும் பெற்ற 'பணி' படத்தை தொடர்ந்து, ஜோஜு ஜார்ஜ் இயக்கும் இரண்டாவது படம் இதுவாகும். 'மாலிகாபுறம்', '2018', 'ரேகா சித்திரம்', 'ஆடு 3' போன்ற வெற்றிகரமான படங்களை வழங்கிய காவ்யா ஃபிலிம் கம்பெனி இப்படத்தைத் தயாரித்துள்ளது. மலையாளம், தமிழ், தெலுங்கு, இந்தி மற்றும் கன்னடம் என



மொத்தம் ஐந்து மொழிகளில் இந்தப் படம் வெளியாகவுள்ளது.

தொழில்நுட்பக் கலைஞர்கள் விவரம்:

ஒளிப்பதிவு: ராஜீவ் ரவி, இசை: யுவன் ஷங்கர் ராஜா, படத்தொகுப்பு: மனு ஆண்டனி, ஒலி வடிவமைப்பு: அஜயன் அதத், தயாரிப்பு வடிவமைப்பு: சாபு மோகன், சண்டைப் பயிற்சி: அன்பறிவ் மாஸ்டர்ஸ், கிரியேடிவ் தயாரிப்பாளர்: ஜயன் நம்பியார், உடை வடிவமைப்பு: சமீரா சனீஷ், ஒப்பனை: ஷமீர் ஷாம், செயற்கை ஒப்பனை: என்.ஜி. ரோஷன், விஎஃப்எக்ஸ்: லிட்டில் ஹிப்போ.